புனிதப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

(1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரு | 5-00 |
| இலங்கை, இந்தியா: | ,, ரூ. | 8 00 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, ரூ | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-00 |
| ,, | அரைக்கலம் | ரூ. 4-50 |
| ,, | கார்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௪௦. } யாழ்ப்பாணம்:—விபவஸு புரட்டாதி மீ ௧௨உ. (1928 செப்டெம்பர் 27) வியாழக்கிழமை. { இலக்கம்—௨௫


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேது
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாலை, சர்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருக்குத்தன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாநிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாநாயகவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்

(M. 36.)

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) **மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.**

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்த தருக்க முடிவு. இதுவோர் அறிவு பயக்கும் நூல்.
—192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) **மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.**

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.
—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3) **கொலைமறுத்தல் பிரசினேத்தரம்.**
—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும்
பிரதான இடங்கள்.

(1) சி. ச. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) ஈ. ஈ. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

## இலங்கை
## ஆயுள்வேத வைத்தியகல்லூரி
## யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்பொண்டன்கோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றுப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

## யாழ்ப்பாண
## ஐக்கியவியாபாரசங்கம்
## லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

## சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைத் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் துரிதஸ்கலிதமென்னும் ஓர்வித நோயினுல் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினுல் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்த வாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினுலும பலஈனத்தினுலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தாத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ருத்தல் | மருந்து | ரூபா | 10 | 00 | வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ ,, | ,, | ,, | 5 | 00 | |
| ¼ ,, | ,, | ,, | 3 | 50 | |

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரா, டக்டர் எம் என். பிள்ளை ஏ. எம். ஏ. சீ.
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயார்செய்யப்பட்டது. மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன. மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினுல் எங்களால் தீர்க்க முடியுமானுல் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது நிராதரோசமா பிகுர்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடுமுதலியதொடுவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts. முத்திரையும் அனுப்பினுல் விபரமாகப் பதில்எழுதப்படும்.

(Q. 104)

## இலங்கைப் புகைரதப்பகுதிக் கேள்விப்பத்திர விளம்பரம்.

வவுனியாவிலுள்ள புகைரதப்பகுதிக்குரிய கற்கிடங்குகளிற் கல்லுக்கின்டுவதற்கும், கின்டப்பட்டகற்களை 2 அங்குலம் உள்துவக்கு வெளியுள்ள வளையத்திற்கூடாகச் செல்லக் கூடிய பிரமாணமாக உடைத்தற்கும், உடைக்கப்பட்டகற்களைச் சமீபத்திலேயுள்ள சிலீப்பர்க்கட்டை அடுக்குமிடத்திற்குக்கொண்டுபோவதற்கும், அங்ஙனம் கொண்டுபோகுங்கற்களை அளந்து பார்ப்பதற்கும் வண்டிகளில் ஏற்றுவதற்கும் தக்கவிதமாய்க் குவித்தற்குமான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும். இதைப்பற்றிய ஏனைய விபரங்களை 1928-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 14உ வெளிவந்த 7663-ம் இலக்கம் கொண்ட அரசினர் கஜெற் பத்திரிகையிற் காணலாகும். மேலும் விபரங்களை அறிய விரும்புவோர் அநுராதபுரத்திலுள்ள டிஸ்திறிக் இஞ்சினீயர்பகுதி தலைமை உத்தியோகத்தரிடத்தேனும் எமதிடத்தேனும் எழுதி அறிந்துகொள்ளலாம்.

கொழும்பு, 15-9-28. T E டற்றன், புகைரதப்பகுதி, தலைமைஉத்தியோகத்தர்.

(G. 965)


## தலைநோவின் விலை என்ன?

ஒரு மணிநேரம் வரை ஒரு சமயம் வருத்தும் அல்லது ஒருநாள் முழுவதும் வாட்டும் இல்லாவிட்டால் தினசரி வந்து தொல்லைப்படுத்தும் இத்தலைநோவிலிருந்து தப்பிக்க என்னதான் கொடுக்க மாட்டீர்கள்? ஆனல் அதிகங் கொடுக்க வேண்டியதில்லை. ஒரு புட்டி.

## லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.



தான் வேண்டியது. உடனே சுகத்தைத்தரும். விலையைப்பற்றி நினைக்கவே மாட்டீர்கள். அதின் வேலை அவ்வளவு திருப்தியாயிருக்கும்.

இதுதான் இந்த ஆதி தைலத்தின் பிரக்யாதிக்குக் காரணம்.

43 வருடங்களாய்க் கை கண்டது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

3—28. Little Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 51.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹு புரட்டாதிமீ ௧௨௳ வியாழக்கிழமை

## ‘யாழ்ப்பாணத்திற்போல’

ஒருகாலத்திலே யாழ்ப்பாணஞ் சிறந்த நாடாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள சனங்கள் கடவுட்பத்தி சமயாபிமானம் கல்வியறிவு விடாமுயற்சி நேர்மை முதலாஞ் சுகுணங்களோடு கூடியவர்களாகவும் ஆடம்பர வாழ்க்கையின்றிச் சிக்கென வாழ்பவர்களாயும் எல்லாராலும் மதிக்கப்பட்டு வந்தனர். யாழ்ப்பாணத்தார் உத்தியோகம் முதலிய கருமநிமித்தமாகத் தென்னிந்தியா சிங்கப்பூர் முதலாம் பிறதேசங்களிற் சென்று வசித்தகாலத்தில் அந்தந்த ஊரவர்களாற் பெரிதும் பாராட்டப்பட்டவர்களாய்த் தமது ஜன்மபூமிக்கு மீண்டுவந்தபோது பெரும் புகழோடு மீண்டுவந்தனர். யாழ்ப்பாணத்தவருடைய சமயாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ஸ்ரீமத் சபாபதிநாவலர், மேலைப்புலோலி ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை முதலாம் அறிஞர்கள் தென்னிந்தியாவில் விளக்கிவைத்தார்கள். சென்னைச்சர்வகலாசங்கத்தார் முதன் முதல் பி. ஏ. பரீக்ஷை நடத்தியபோது அந்தப் பரீக்ஷையிற் சித்தியடைந்தவர்கள் இருவராம். அந்த இருவரும் யாழ்ப்பாணத்தவர்களாம். அந்தமுறை இந்தியாவில் எவராயினுங் குறித்த பரீக்ஷையிற் சித்தியடைந்திலராம். மேலும் அரசியல் விஷயத்தில் நமது அயலவர்களாகிய சிங்களருக்குப் பிரதிநிதிகளாய் நின்றவர்களும் சிங்களரை வழிநடத்தியவர்களும் யாழ்ப்பாணத்தவர்களாம். அக்காலத்திலே காலமழை சமவிருத்தி என்னுமிவைகளோடு கூடியதாய் இந்நாடு சிறப்படைந்திருந்ததெனக் காலங்கண்ட முதியோர் சொல்வர். பிருத்தானிய அரசினரும் யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாணத்தவரையும் பெரிதும் நன்கு மதித்து வந்தனர். கொலை களவு மதுபானம் சலகம் முதலாம் துஷ்டச் செயல்கள் முற்காலத்தில் அரியவாம். விபரீதங் கிடையாதாம்.

இக்காலத்திலேவெனிலோ அந்த மேலான இயல்புகளெல்லாம் ஒன்றொன்றாக இந்நாட்டைவிட்டகல அவைகளுக்கு நேர் விரோதமான தீமைகள் இங்கே வந்து சேர்வதாயினவெனலாம். சமயாபிமானம் ஈஸ்வரபக்தி தானதருமம் சத்தியம் கல்வி விடாமுயற்சி நேர்மை ஒழுக்கம் முதலாம் சற்கருமங்கள் இந்நாட்டை விட்டேக் குடிபோய்விட்டன. விபரீதங்கள் தலைப்பட்டன; ஆங்கிலங் கற்றோர் கல்லாதார் என்னுமிருபாலாருள்ளும் தொழின்முயற்சியின்றிச் சோம்பர்களாயிருப்போரும் நீதியீனமான வழிகளினாற் பொருளீட்ட முயல்வோரும் பலராயினர். தம்நயங்கருதுங் குணம் பலரிடத்தும் புகுந்துகொண்டது. வறுமை தலைப்பட்டுவிட்டது; ஐக்கியக்குறைவு அதிகரித்துவிட்டது; பெரியார்சிறியாரென்ற வித்தியாசமில்லாதொழிந்தது. எங்களுக்கு வேண்டிய நீதிகளையெடுத்துச்செல்வனவும் ஈஸ்வரபக்தியை மனத்திற் கிளரச் செய்வனவுமாகிய தமிழ் நூல்கள் இக்காலத்திற் கற்கப்படாதொழிந்தன.

இக்காலத்திலேவெனிலோ இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வசிப்பவர்கள் இவர்களுள்ளும் சிங்களர் ஏதும் தீமையான செயல்களுக்கு யாழ்ப்பாணத்தவர்களையே திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டத் தலைப்பட்டுவிட்டனர். சில நாட்களின்முன் வடமத்தியமாகாணத்தலைவராகிய மிஸ்டர் ஹொட்ஸன் என்பவர் ஹாமிஸ் பெரிரா எனப்பெயரிய ஒருமோட்டார்ச் சாரதியின்மீது அவன் சொந்த உபயோகத்திற்கான லைசென்ஸைக் கொண்ட ரதத்தைக் கூலிக்குப் பிரயாணிகளை ஏற்றினனென்றும் அப்படி ஏற்றியபோது இருவரைப்பிரயாணத்திற்கு மேலதிகமாக ஏற்றிவிட்டானென்றும் குருநாக்கல் போலிஸ் கோர்ட்டில் வழக்குத்தொடர்ந்தார். அவர் சாட்சியஞ் சொல்லும்போது யாழ்ப்பாணத்திற் செய்யப்படுவதுபோல் சொந்த உபயோகத்துக்குரிய ரதங்களை [illegible] வைத்துக்கொண்டு எல்லாரதங்களிலும் கூலிக்குப் பிரயாணிகளை யேற்றுதலாகிய ஈனவழக்கம் நமது மாகாணத்தில் தலையெடுக்க விடமாட்டேன்” என்றாராம். இத்தத்தவறும் மிகவும் பழையவைகளும் அபாயத்திற்கு ஏதுவானவைகளுமாகிய மோட்டாரதங்கள் “பஸ்”களில் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதும் இங்கே சகசமாய் விட்டன. இது மாத்திரமா, தாமாகக் கள்ளுவேண்டாமென்று சம்மதஞ் சொல்லிச் சகல மதுபானக்கடைகளையும் ஒழித்துவிட்டு இப்பொழுது எல்லாவகையான மதுபானங்களையுஞ் சோரமாகக் கையாடுபவர்களும் யாழ்ப்பாணத்தவர்களேயாவர்; அரசினராற்றடுக்கப்பட்ட அபின் கஞ்சா என்னுமிரு பொருள்களையுஞ் சோரமாக வியாபாரஞ் செய்பவர்களும் கையாடுபவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவெளியாக அபராதமிறுப்பவர்களுஞ் சிறைவிதிக்கப்படுபவர்களும் இங்குள்ளவர்களேயாவர். மற்றை ஊர்களில் இல்லைபோலெனில் இவ்வளவு அதிகமாக இல்லை.

இனி, யாழ்ப்பாணத்தின் விஷயமாக அரசினர் எப்படி நடந்துகொள்ளுகின்றார்களென ஆராயின் அவர்களும் நமதூரை அலட்சியஞ்செய்தே வருகின்றார்கள்; வடமாகாணப் புகைரதப்பாதையில் ஓடும் புகைவண்டிகளும் யந்திரங்களும், ஏனைய மாகாணங்களிற் பல்லாண்டுகளாக ஓடித் தேய்ந்து அழுக்கடைந்து சந்துக்கள்தோறும் மூட்டுப்பூச்சியுறப்பெற்று, அறளைபெயர்ந்த 60 வயசுக்குமேற்பட்ட கிழவர்போல் ஓடும்போது பேரொலி செய்வனவாய், புகைரதச்சாரதியின் சொல்லுக்குஞ் செயலுக்குங் கீழ்ப்படியாது, தாம் நினைத்தபடி ஓடியும் நின்றும் ஒழுகும் இயல்பினவாய்க் காணப்படுகின்றனவே. ஏனைய மாகாணங்களிலாயின் இந்த யந்திரங்களும் வண்டிகளும் புகைரதப்பகுதித் தொழிற்சாலைக்கு முந்தியே அனுப்பப்பட்டிருக்கும். ஊரவர்கள் மோட்டாரதங்களில், பிரமாணத்திற்கு அதிகமான சனங்களை ஏற்றுவதற்கு எத்தனையோ ஆண்டுகட்கு முந்தி அரசினர் புகைவண்டிகளில் 16 என விதிக்கப்பட்ட பெட்டிக்கு 32 பிரயாணிகளை ஏற்றிவரலாயினர். பழைய புகைவண்டிகள் மாத்திரமா, யாழ்ப்பாணத்திற் புதிதாக அமைக்கப்பட்டுள்ள டெலிபோன் யந்திரங்களை ஆராய்வோம்; இவைகள் எல்லாம் கொழும்பு முதலிய இடங்களில் நன்கு உபயோகிக்கப்பட்டுத் தக்க அனுபவமடைந்தபின் இளைப்பாற விடாமல் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டனவென்பது அவற்றைக் கண்ணுற் பார்ப்பார்க்கும் ஒன்றைவிட்டொருநாளைக்கு இவற்றைப் பழுது பார்க்கும் இங்குள்ள டெலிபோன் கூலியாட்களுக்கும் நன்கு விளங்குமல்லவா. யாழ்ப்பாணத்தைக் குறைசொல்லி ஆவதென்ன. இவர்கள் நிலைமை “அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி”என்றவாறிருக்கிறது.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

அந்தப் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பிள்ளைகளுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விகிதமானோர் சைவர்களாயிருப்பவும், சைவர்களுடைய விசேஷதினங்களாகிய வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி, நவராத்திரி, சிவராத்திரி, ஆடியமாவாசை, சித்திரைப் பூரணை என்னும் இப்படிப்பட்ட சுபதினங்களிற் பள்ளிக்கூடத்திற்குப் போகாதொழிந்த பிள்ளைகளைத் தண்டிப்பது வழக்கம்; கத்தார், ஈஸ்டர் பெருநாள் முதலிய தினங்களுக்கு மாசக்கணக்கில் விடுதலை விடப்படும்; முக்குறியாக விபூதி தரித்துக்கொண்டும், சந்தனப் பொட்டிட்டும், காதில் பூ வில்வம் என்னும் இவைகளை வைத்துக்கொண்டுஞ் செல்லும் பிள்ளைகள் அங்குள்ளாரால் இயல்பாக வெறுக்கப்பட்டனர்; மந்தர்களாயிருந்தாலும் அங்ஙனப் பிள்ளைகளாயிருந்தாலும் சைவசமயத்தை அலட்சியஞ் செய்து, அவர்களுடைய போதனையைக் கேட்டு நடக்கும் பிள்ளைகள்மீது அவர்கள் மிகுந்த அன்பு பாராட்டி வந்தார்கள்; ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டத்திற்குச் செல்லும் பிள்ளைகளுக்கு விசேஷ அம்சங்களும் மார்க்ஸ், பாவைப் பிள்ளை முதலிய உபகாரங்களும் கொடுக்கப்படுவன; இதனால் ஞாயிற்றுக்கிழமைக் கூட்டத்திற்குச் செல்லாத பையன் எவ்வளவு திறமையோடு படித்தாலும் முதற்பையனாக வருதல் முடியாமலிருந்தது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி முதலாம் நீதிநூல்கள் அங்கே படிப்பிக்கப்பட்டன. ஆனால் இவைகளிலுள்ள காப்புச்செய்யுளும் “சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு, அபாயம் ஒருநாளுமில்லை..” என்பன போன்ற கடவுளைப்பற்றி வருஞ் செய்யுட்களும் படிப்பிக்கப்படுவதில்லை; தேவாரம் தாயுமானவர் பாடல் என்னுமிவைகளிலுள்ள சில பாக்களை அங்குள்ளவர்கள் இடையிடையே மாற்றித் தங்கள்மதச் சார்பாகப் படிப்பித்துவந்தார்கள்; சுருக்கமாகச் சொல்லுமிடத்து அப்பள்ளிக்கூடத்தில் அறிவுக்குரிய பொதுக் கல்வியைக் காட்டிலும் அவர்களுடைய சமயக்கல்வியே எங்களுக்கு அதிகமாகப் பயிற்றப்பட்டது; போதனைகள் முழுவதும் எங்கள் சமயம் சாதி ஆசாரம் பழக்கவழக்கம் என்னுமிவைகளுக்கு முழுமாறானவைகளேயாம்; இவைமாத்திரமா, எங்கள் தாய் தகப்பன் குரு பெரியோர் சமயகுரவர் என்னுமிவர்களைக் கண்டிப்பதே அவர்கள் தொழிலாயிருந்தது; இப்படி அவர்கள் செய்யும்போது சிற்சில சமயங்களில் எங்களுக்குப்பெரும் ஆத்திரம் வருவதுமுண்டு; ஆனாற் செல்லாவிடத்திற் சினங் குற்றம் என்றபிரகாரம் நாங்கள் ஏதும் எதிர்த்துப் பேசுவதற்கு எங்களுக்கு அறிவும்போதாது அதிகாரமுமில்லை. இப்படியெல்லாமிருந்தாலும் என் விஷயத்தில் அவர்கள் என் தகப்பனுக்குப் பயந்துபோலும் சமயத்தை விட்டுப்பிரவேசிப்பதில்லை. நான் இயன்றவரையிற் கிரமமாக என் பாடங்களைப் படித்து, பரீக்ஷையிலுஞ் சித்தியடைந்து வந்தேன்.

* * *

இந்தச் சந்தர்ப்பத்தில் மிஷன் பள்ளிக்கூடத்திலே படித்ததனாற் பெற்ற எனது அனுபவத்தையும் சொல்வது நன்று; அந்தச்சமயத்துப்பிள்ளைகள் அந்தச் சமயத்துப் பள்ளிக் கூடங்களிற் படிப்பதே முறை; சைவசமயப்பிள்ளையொருவன் அந்நியமதப்பள்ளிக்கூடத்திற் படிப்பதனால், எறும்பூரக் கல்தேயும் என்றபடி காலகதியில் அவனுடைய சொந்தச் சமய அபிமானமும் கொள்கைகளுந் தேய்ந்து ஈற்றில் பூரணமாய் இல்லாதொழியும் என்பது நிச்சயம்; சைவப்பிள்ளைகளாய் அந்தப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்த சில பிள்ளைகள் காலகதியிற் சைவ ஒழுக்கத்தையும் விடுத்து விபூதிதாரணந் தரித்தலின்றி ஒருசமயத்திலும் பற்றில்லாதவர்களாய் தெய்வமில்லையென்று நாஸ்திகம் பேச நான் கண்டுள்ளேன்; மேலும் அந்நியமதப் பள்ளிக்கூடத்திற் படிப்பதனால் உள்ளொன்று புறம்பொன்றாக நடக்குங் குணம் அப்படிப்படிக்கும் பிள்ளையிடத்து உண்டாகின்றது; அங்கே படிப்பிக்கும் உபாத்தியாயர்கள் உள்ளொன்று புறம்பொன்றாய் ஒழுகுவதைப் பிள்ளைகளும் அவதானித்துத் தாங்களும் அப்படிச்செய்யத் தலைப்படுகின்றார்கள்; தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்றதற்கு இவர்கள் பள்ளிக்கூடத்திற் பழகிய இந்தப்பழக்கந்தான் பின்னர் இவர்கள் வாழ்நாள் முழுவதும் இவர்களிடத்திற் குடிகொள்ளும். (வரும்)

### குமரேச சதகம். ௧௨.

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக்குவதிரவி நிசிவிளக்குவதுமதி
 பார்விளக்குவது மேகம் [தாக
பதிவிளக்குவதுபெண் குடிவிளக்குவ
 பரிவிளக்குவது வேகம் [நல
இகல்விளக்குவதுவலி நிறைவிளக்குவது
 மிசைவிளக்குவது சுதி [துண்டி
சிடம்விளக்குவதுகுடி யுடல்விளக்குவ
 தினியசொல் விளக்குவ தருள்
புகழ்விளக்குவதுகொடை தலம்விளக்குவதறிவு
 பூவிளக்குவது வாசம் [துவதுகலை
பொருள்விளக்குவதிரு முகம்விளக்
 புத்தியை விளக்குவது நூல் [நிசம்
மகம்விளக்குவது மறைசொல் விளக்குவது
 வாய்மையை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
 மலைமேவு குமரேசனே.

இ-ள். பகற்காலத்தைப் பிரகாசமுறச் செய்வது சூரியன்; இராக்காலத்தை விளங்கச் செய்வது சந்திரன்; பூமியைச் சிறக்கச்செய்வது மழை; கணவனைப் புகழோடு இருக்கச் செய்பவள் மனைவி; பிரஜைகளை இனிது வாழச் செய்பவன் அரசன்; குதிரையைச் சிறக்கச் செய்வது அதன் வேகம்; வெற்றியை விளக்கிவைப்பது வலிமை; (பெண்களில்) கற்பை விளக்குவது ஒழுக்கம்; சங்கீதத்தை விளக்குவது சுதி; மனையைச் சிறக்கச் செய்வார் ஆங்கு வசிக்கும் குடிகளாவர்; தேகத்தை அழகுறச் செய்வது உணவு; இன்சொல்லைப் பயன்படச்செய்வது அன்பு; புகழைப் பெருக்குவது கொடை; தலத்தை விளங்கச் செய்வது ஞானம்; பூவுக்குச் சிறப்பைத்தருவது சுகந்தம்; செல்வத்தை விருத்தியுறச் செய்பவள் இலக்குமி; முகத்தை அழகுறச்செய்வது புன்சிரிப்பு; புத்தியை நுட்பமாக்குவது நூலுணர்ச்சி; யாகங்களைச் சிறப்பிப்பது வேதம்; வாக்குக்கு உறுதியைத் தருவது சத்தியம்; வாவியை அழகுறச் செய்வது நீர்ப்பெருக்கு; மயிலேறி விளையாடுங் குகனே புல்வயலீடு மலைமேவு குமரேசனே எ-று.

### காலநிலை.

மழையில்லை; மழைக்கோலம் இடையிடையே காணப்படுகின்றது. விதைப்பு மிக முயற்சியாக நடைபெறுகின்றது. சென்றவருடம்போல் இவ்வருடத்திலும் மழையில்லாது வேளாண்மை தவறிவிடுமோவெனக் கமக்காரர் அஞ்சுகின்றனர்.

### சைவமாணவர் மகாநாடு.

நிகழும் விபவஹு புரட்டாதிமீ ௧௪௳ (30-9-28) ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சைவமாணவர்களைக்கொண்ட ஓர் சைவமகாநாடு மேற்படி கல்லூரிச் சைவமாணவர் சங்கத்தின் முயற்சியால் கூட்டப்படுமென அறியலானோம்.

### வட்டுக்கோட்டையில் மூவர் கொலைசெய்யப்பட்டனர்.

இன்று காலை வட்டுக்கோட்டையில் மூவர் கொலை செய்யப்பட்டனரெனத் திடுக்கிடத்தக்க சமாசாரம் ஒன்று எங்களுக்கு எட்டியது. நாம் பொலிஸ்தானத்தில் விசாரணை செய்தபொழுது அவ்விதமான ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கின்றதெனத் தமக்கு ஒரு தந்தி அனுப்பப்பட்டிருக்கிறதெனவும், அதை விசாரணை செய்வதற்குத் தாம் பொலிஸ் நீதிபதியோடு அங்குச் செல்வதாகவும் பொலிஸ் அதிகாரி (Superintendent) எமக்குத் தெரிவித்துள்ளார். ஏனைய விபரங்கள் தெரியவில்லை.

### நெருப்பு நூர்க்கும் யந்திரம்.

இப்பொழுது யாழ்ப்பாணப்பட்டின பரிபாலன சங்கத்தார் பட்டினவாசிகளின் உபயோகத்திற்காக ஒரு நெருப்பு நூர்க்கும் யந்திரத்தைப் பெருந்தொகைப் பணஞ் செலவிட்டு வாங்கியிருக்கிறார்கள். அந்த யந்திரம் இப்பொழுது யாழ்ப்பாணம் பொலிஸ்தானத்தில் இருக்கின்றது. இந்த செப்டெம்பர்மீ 29௳ சனிக்கிழமை 5 மணியளவில் பொலிஸ்தானத்திற்கு முன்பாகவுள்ள முற்றவெளியில், கொழும்பு ஹன்டர் என்னும் வியாபார சமுதாயத்தாரின் பிரதிநிதியொருவரால் அந்த யந்திரத்தின் உபயோகம் யாவருக்கும் காண்பிக்கப்படும். நெருப்பினால் அபாயம் வரும்பொழுது பொலிசருக்குத் தெரிவித்தால் உடனே அவர்கள் அந்த யந்திரங்கொண்டு இயன்ற உதவி செய்வார்கள்.

### யாழ்ப்பாணத்திற் சுகாதாரத்தைப்பற்றிய முதற் கூட்டம்.

டக்டர் A. N குமாரசுவாமி அவர்களாலும் டக்டர் நடராசா அவர்களாலும் விளம்பரஞ்செய்தபிரகாரம் நேற்றையத்தினம் 4 மணியளவில் யாழ்பாணக் கச்சேரியில் ஷை கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் வடமாகாணத் தலைவராகும் மிஸ்டர் J. D. பிறவுண் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அப்பொழுது அநேகர் சமுகமாயிருந்தனர். கூட்டத்தின் நோக்கத்தையும், யாழ்ப்பாணத்தில் சுகாதாரக்காட்சிகளைவைத்து நடத்துவதினால் அடையக்கூடிய நன்மைகளையும் அங்குச்சமுகமாயிருந்தோர்க்குமேலே கூறிய இருவைத்தியரும் விளக்கச் செய்தனர். 1929ஆ மார்ச்சு மாத முதற்பகுதியில் சுகாதாரத்தைப்பற்றிய கூட்டங்களும் காட்சிகளும் நடாத்த நிச்சயித்தனர். கூட்டத்தின் முகாந்திரத்தைக் கொண்டு நடத்த அங்கிருந்தோரை அங்கத்தினராகக் கொண்ட ஒரு சபை நியமிக்கப்பெற்றது. மேலேகூறிய இருவைத்தியரும் இணைக்காரியதரிசிகளாகவும், பட்டினபரிபாலனசங்க அக்கிராசனராகும் ஸ்ரீ R. சிவகுருநாதர் அவர்கள் தனாதிகாரியாகவுங் கொண்ட ஒரு நிர்வாகசபை நியமிக்கப்பெற்றது. அந்த நிர்வாக சபையார் கூட்டங்களையும் காட்சிகளையும் பற்றிய விபரங்களைப் பின்னர்த்தெரிவிப்பார்களெனத் தெரிகிறது.

## ஆயுர்வேதக் கல்வி.

ஆயுர்வேதக் கல்வியை விருத்திசெய்வதற்காக உதவப்பட விருக்கும் ரூபா 75000 எவ்வழிகளிற் செலவு செய்ய வேண்டுமென ஆராய்ந்து அறிக்கைசெய்யும்படி, கௌரவ மிஸ்டர் L. பாலசிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஓர் சங்கம் நமது இலங்கைத் தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறது.

## சங்கீத வித்துவான்.

சங்கீத விற்பன்னராகிய ஸ்ரீ. P. சாம்பமூர்த்தி (B. A. B. L.) அவர்கள் செப்டெம்பர் 27ௗ ஆகிய இன்று யாழ்ப்பாணம் சுண்டிக்குளியிலுள்ள ஆங்கில கல்லூரியில் "இலங்கையிலுள்ள கலாசாலைகளில் முக்கியமாய்ச் சங்கீதம் கற்பிக்கவேண்டும்" என்னும் விஷயமாக உபந்நியாசம் செய்வர். நாளைத்தினம் மாலை 6½மணியளவில் அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சங்கீதம் நடத்துவாரென அறிகின்றேம்.

## பாடசாலைச்சிறுமி உளியாற் கொத்தப்பெற்றமை.

மலிக்காக்கந்டே என்னுமிடத்திலுள்ள பாடசாலையிற் கல்விகற்கும் அடெலின் என்னும் சிறுமிக்கு தொறிஸ் வேர்ணண்டோ என்பவன் ஒருவித நியாயமில்லாது உளியாற் கொத்தினானெனக் கொழும்புப்பொலிஸ்கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டான். அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டதனும் மூன்றுமாதக்கடூழியச்சிறை விதிக்கப்பட்டது.

## நீர்கொழும்பு நியாயவாதிகளுக்கு அனுப்பப்பட்ட கட்டளை.

நீர் கொழும்பு நியாயவாதிகளாகும் மிஸ்டர் P. S. P. ஜயதிலக என்பவருக்கும் மிஸ்டர் பேட்றும் டி சில்வா என்பவருக்கும் அவர்களைவேலையினின்றும் ஏன் நிறுத்தக்கூடாதென்பதற்கு நியாயம் காட்டும்படி சுப்பிறீம்கோட்டார் அனுப்பிய கட்டளை சென்ற திங்கட்கிழமை டெ கோட் நீதிபதிகள் மூவர் ஒருங்கே இருக்கும் சமயத்தில் விளக்கம் நடந்தது. முடிவு பெறுமையால் தவணையிடப் பட்டிருக்கிறது.

## கடலிற் குளிக்கும்பொழுது மாண்டான்.

மாத்துறை விடுதிச்சாலைக்குப் பின்புறத்தில், அவ்விடுதிச்சாலையில் குடிவகை விற்பனவுகாரனாகும் அப்புஹின்னே என்பவனும் இன்னொருவனும் குளிக்கச் சென்றிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் அப்புஹின்னேவைக் காணவில்லை சில வருடங்களுக்கு முன்னர் ஹற்றனிலுள்ள R. U. கோட்டன் என்பவர் அமிழ்ந்திய இடமும் அதுவாகும். உடனே வள்ளங்களிற் சென்று காணாதுபோன அப்புஹின்னேவைத் தேடினர்; ஆனால் அகப்படவில்லை. அவனுக்கு வயது 33. இன்னும் கொஞ்சநாளைக்குள் விவாகஞ்செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்ததாம்.

## சட்டநிருபணசபை.

கொழும்பில் இன்றுகூடும் சட்டநிருபணசபையில் கௌரவ ஸ்ரீ வை துரைசுவாமியவர்கள் பின் வரும் பிரேரணைகளைப் பிரேரிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

"இன்னுமொரு வேதன விசாரணைச் சங்கத்தை நியமித்தல் இப்பொழுது அவசியமற்றதெனவும், அவ்விதமான ஓர் சங்கம் பின்னர் வேண்டியிருப்பின் குடியரசுச் சபையார் அங்கீகரித்தபடி நியமிக்கப்படல் வேண்டுமெனவும், அந்த விசாரணைச் சங்கத்தார் அனுப்பும் அறிக்கைப்பத்திரம் குடியரசுச் சபையாரின அங்கீகாரத்திற்கு அமைவாயிருத்தல் வேண்டுமெனவும் இச் சட்டநிருபண சபையார் அபிப்பிராயப் படுகிறார்கள்" என்பதும் "இந்தேசத்திலுள்ள பெண்களுக்கு அரசுரிமைச் சலாக்கியம் அளிப்பது அவசியமில்லையெனவும், ஆனால் கற்ற பெண்மணிகள் விரும்பியபடி 21 வயதிற்கு மேற்பட்டவர்களும் ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம் என்னும் பாஷைகளில் எட்டாம் வகுப்புக்குச் சமமான கல்வியில் தேறியவர்களுமான பெண்மணிகளுக்கே அரசுரிமைச் சலாக்கியம் அளிக்கப்பட வேண்டுமெனவும், இச் சட்டநிருபணசபையார் அபிப்பிராயப்படுகிறார்கள்" என்பதுமாம்.

## தீயினால் நேர்ந்த நஷ்டம்.

ஜேலத்தின் வலதுபுறக் கரைக்கு அணித்தாகவுள்ள அனேக கடைகள் நீக்கிரையாயின. 300 கடைகளுள்ள 100 கட்டடங்கள் அழிந்தமையினால் பெருந்தொகையான சனங்கள் வீடின்றி அலைகிறார்கள. நஷ்டம் இருபதுலட்ச ரூபாவென மதிப்பிடப்பட்டது. சென்ற வியாழக்கிழமை காலை தொடக்கம் நாள் முழுவதும் தீ எரிந்துகொண்டேயிருந்தது. நெருப்பணைக்கும் கருவியின் உதவியினால் ஒருவாறு தீ அணைக்கப்பட்டது.

## பறக்கும் கலாசாலை.

மாணவர்கள் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் பொழுதே பயிலத்தக்க விதத்தில் ஒரு நூதன பறக்கும் கலாசாலையை குட் ஈயர் ஸெப்பலின் கார்ப்பரேஷன் என்ஜினியர்கள் கட்டுகின்றனர். இது ஒரு பெரிய விமானமாகும். பல நாட்கள் வரை பூமியிலிறங்காது மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்புக்களை நடத்தும்படி சகல சௌகரியங்களும் அமைக்கப்படுமென்றும், அனுபவ பூர்வமாக ராணுவ விமானப் பயிற்சியை மாணவர் இதன் மூலமாய்ப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் கூறப்படுகிறது. உலகில் முதன் முதலாய் தோன்றும் பறக்கும் கலாசாலை இதுவே.

## இந்துக்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கும் கலகம்.

சென்ற வெள்ளிக்கிழமை இரவு தேவாங்கிரி நகரத்தில் இந்துக்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கு மிடையில் ஒரு பெரிய கலகம் நிகழ்ந்தது. கணபதி உற்சவம் நடக்கும் பொழுது பள்ளிவாசலுக்கு முன்பாகச் செய்த வாத்திய முழக்கங் காரணமாகவே கலகம் விளைந்தது. இருபகுதியாருக்குமிடையில் வாக்குவாதமுண்டுபட்டுப் பெரிய சண்டையாகி ஈற்றில் மூன்றுபேர் மாண்டனர். அதுவுமன்றி இரண்டொரு கட்டடங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இஸ்லாமானவர்கள், கல்லு, பொல்லு, செருப்பு முதலியவை கொண்டு கணபதி உற்சவத்தைத் தாக்கினார்களெனவும், கணபதி எழுந்தருளி வந்த தண்டிகையைத் தீக்கிரையாக்கினார்களெனவும், இந்துக்களில் 40பேர் வரையில் காயமடைந்தனரெனவும், 12 இந்துச்சிறுவர்களைக் காணவில்லையெனவும் பின்னர் வந்த செய்தியால் தெரிகிறது.

## உலகில் பெரிய கட்டடம்.

உலகிலேயே மிகவும் உயரமானதும் பெரியதுமான கட்டடம் சிகாகோவில் கட்டத் தொடங்கி விட்டார்கள். இது 75மாடங்கள் உள்ளதாயிருக்கும் அடித்தரையின் விஸ்தீரணம் 4,650,000 சதுர அடி. உயரம் 845 அடி. எனவே இக் கட்டடம் எப்பெல் கோபுரத்தை விட 139 அடியும், நியூயார்க்கிலுள்ள வூல்வொர்த் கட்டடத்தை விட (இப்போது உலகில் உயரமானது) 53 அடியும் அதிக உயரமுள்ளதாகும். 90லட்சம் பவுண் செலவாகுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலுள்ள மொட்டை மாடத்தில் நீந்துவதற்குக் குளம் ஒன்று அமைக்கப்படும். 47-வது மாடத்துக்குமேல் 70-வது மாடத்துக்குக் கீழ் ஒரு விடுதிச்சாலை இருக்கும். இதில் 1000 அறைகள் இருக்கும். 1200மோட்டார் வண்டிகள் நிறுத்தக் கூடிய மண்டபம் தனியாக இருக்கும். இக் கட்டடத்தில் வாடகைக்கு இடம் வேண்டி இப்பொழுதே பல வியாபாரிகள் முன் பணங் கொடுத்துவிட்டார்களாம்.

## சிறைச்சாலையில் சட்டப்படிப்பு.

அமெரிக்காவிலுள்ள மேரிலாண்டில் 1914-ம் வருஷத்தில் ஜார்ஜ் டேவிஸ் என்னும் கிழவன் ஏதோ குற்றத்திற்காக 15வருஷம் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டான். சிறைச்சாலைக்குள் இருந்தபடி இவனைப்போல் முன்னுக்கு வந்தவன் உலகிலேயே வேறில்லை யென்று சொல்லலாம். அவன் சிறை புகும்போது சொற்ப படிப்பே உடையவனாயிருந்தான். சிறையில் அவன் விடாமுயற்சியுடன் படித்து வந்தான். தபால் மூலம் சட்டம் கற்பிக்கும் ஒருகலாசாலையில் சேர்ந்து சட்டம் படித்தான். ஒரு புதிய வகையான மோட்டார்யந்திரம் கண்டுபிடித்து அதை வேறு யாரும் செய்யாதபடி அரசாங்கத்தில் பதிவு செய்தான். இவற்றையல்லாமல் ஒழிந்த வேளைகளில் வேலை செய்து 300பவுண் சம்பாதித்துத் தான் யாருடைய பணத்தைத் திருடியதற்காகச் சிறைக்கனுப்பப் பட்டானோ அவனுக்கு அப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தான். டேவிஸ் விடுதலையடைந்ததும் சட்டப் பரீட்சைக்குப் போக உத்தேசித்திருக்கிறானாம்.

## கடிதக்கு விஞ்ஞாபனம்.

1. கன்னாகம ஸ்ரீ சிதம்பரசாஸ்திரிகள் அனுப்பிய கடிதம் "கலிகாலதீப"த்தில் வெளிவந்த ஓர் கடிதத்திற்குப் பதிலுரையாயிருத்தலினால், அக்கடிதத்தை அப்பத்திரிகையிலேயே பிரசுரிப்பது மாபாரும்.

2. திருக்கோணமலை ஸ்ரீ த சிவசாமிக்குருக்கள் அனுப்பிய "கன் மிதித்தல்" என்னுங் கடிதம் "சோதிட பரிபாலினி" யில் வெளிவந்த கடிதத்திற்குப் பதிலுரையாதலால் அதனை அப்பத்திரிகையில் வெளியிடுவதே அழகு.

## தேகவியோகம்.

கோலசிலாங்கூரைச் சேர்ந்த சவாக் பார்னத்தில் பிரதம ஓவசியராயிருந்த ஸ்ரீ சி. பொன்னையா அவர்கள் விபவஹு ஆவணி மாதம் 11-ம் திகதி (26-8-28) ஞாயிற்றுக்கிழமை காலை ஆங்கில மேலதிகாரிகளுடன் உத்தியோகம் பார்க்கும் பொருட்டுச் சென்ற இடத்தில் கடுமையாக நோய்வாய்ப்பட்டுப் பகல் 12 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்து விண்ணுலகடைந்தனர். அவருடைய பிரேதம் மறுநாள் அவருடைய இல்லறத்திற்குக் கொண்டுவரப்பட்டுத் தகனஞ் செய்யப்பெற்றது. இவர் கீழ்புறத்திலுள்ள ஓர் பிரபல குடும்பத்தைச் சார்ந்தவர். கீழ்புறத்தைச் சார்ந்த பறளாயில் எழுந்தருளியிருக்கும் விக்னேசுவரப் பெருமானுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கும் பெரும் பொருள் செலவிட்டு நந்தவனம் அமைத்தவரும் இவரேயாவர். இறக்கும்போது இவருக்கு வயது 40. இவருடைய அகால மரணம் அநுதாபப்படத்தக்கதாம். —நடித.

## மகாகும்பாபிஷேகம்.

நல்வளஞ் சிறந்தோங்கு மென்னகரிலும் பொன்னகராகிய கோலாலம்பூர் "ஸ்கொற்" ரோட்டின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணியப்பெருமான் ஆலயத்தில் விபவஹு ஆனிமீ 26ௗ முற்பகல் ஒன்பது மணிக்குமேல் நிகழ்ந்த சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில், மூலஸ்தான யந்திரஸ்தாபனமும் சம்புரோக்ஷணாபிஷேகமும் வேண்டுவார் வேண்டுவதை அனுக்கிரகிக்கும் அருளுருவத்திருமேனிகொண்டவதரித்தஅறுமுகப்பெருமானுக்கு ஆதனப் பிரதிஷ்டாபிஷேகம் நடைபெற்றது. இத்தருணம் நகரத்தார், இந்தியர்,யாழ்ப்பாணத்தாராதியாம் பல்லாயிரக்கணக்கான சனங்கள் குழுமி "அரகர" என்ற ஓசை ஆர்ப்பரிக்குஞ் சமுத்திரமென ஒலிப்ப, சந்நிதியில் எழுமையுந் தொடர்ந்த பேரன்புடன் இஷ்டசித்திகளை எய்துவான் தரிசித்தனர். அன்றிரவு அறுமுகப் பெருமானுக்குத் திருக்கல்யாண மகோற்சவம் அதிவிசித்திர தண்டிகையில், பக்தர்களின் பாராயண கோஷ்டியுடனும், மேளவாத்தியம் வாணவேடிக்கைகளுடனும் வெகு விமரிசையாய்த் திருவுலா நடைபெற்றது. மேற்படி கும்பாபிஷேகத்தில் கர்மாரம்பமுதல் திருக்கல்யாணம் மண்டல இறுதிவரைக்குஞ் செய்யவேண்டிய கிரியைகள் முழுவதும் அவ்வக்காலங்களில் நியதி வழுவாது வேதாகம விதிப்பிரகாரம் யாழ்ப்பாணம் பிரம ஸ்ரீ இ. சோமாஸ்கந்தக் குருக்களவர்களால் பக்திசிரத்தையுடன் செவ்வனே நடந்தேறியன. இத்திருத்தொண்டில் அதிசிரத்தை யெடுத்து நிறைவேற்றிய மெய்யடியார்களுக்கும் தரிசித்த பக்திசிரோன்மணிகளுக்கும், "முருகா வென ஒருகாலோத இருவினையைத் தணித்திடும் பவராகிய" சண்முகப்பெருமான் அருள் புரிவாராக. நடித.

## கனந்தங்கிய இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு.

ஐயா!

ஆன்மாக்களுக்கு அறிவு கொழுத்தும் பொருட்டு அவதாரஞ் செய்த ஞானசாரியனையொப்ப இவ்வுலகத்தார்க்கு நல்லறிவு புகட்டும் நம்மிந்துசாதனப் பத்திரிகையின் ஓர் கோணத்தில் எங்கள் துன்பத்தை வெளியிடுவான் வேண்டி எழுந்த இச் சிறு விண்ணப்பத்தைப் பிரசுரஞ் செய்யுமாறு வேண்டுகின்றேம்.

### விண்ணப்பம்.

அன்பர்களே!

எந்நோய்களினும் வன்றோயாகிய குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டோர் மட்டக்களப்பு மாந்தீவு என்னும் நித்திய சிறைச்சாலையில் துன்பமனுபவித்துக் கொண்டிருப்பது யாரும் பிரத்தியட்சமாய்க் காணக்கூடியதாம். அன்றியும் நாங்கள் இனபந்துக்களாலும் மற்றும் வகைகளாலும் ஆரும் அகதிகளாயிழந்து செத்தும் சாகாதவர்களாய் ஆழ்ந்த துக்கசாகரத்தில அமிழ்த்தப்பட்டுச் சாரு ணணியம் பொருந்திய ஆங்கில அரசினரின் ஆகாரவான் ஊண் உடை மருந்து முதலியன அளிக்கப்பெறுகின்றேம்.

என்றாலும், எங்களுக்குள்ள சமய அபிமான மேலீட்டினால் ஒரு நிதாயினும் வருவதுகள் தோறும் வருகின்ற விசேஷ தினங்களாகிய சிவராத்திரி முதலியவற்றைக் கொண்டாடியாகுதல் எங்களுக்குள்ள துன்பத்தை யாற்றிக்கொள்ள ஆசைப்பட்டாலும் அதற்கு வேண்டியன புரிந்து எங்களுக்காக இரங்கி நாங்களும் மக்கள்தானே யென்று மதிக்கும் சிவகாருண்யமுடைய புண்ணிய சீலர்களை எம் சமயத்தில் விரல்வைத்து எண்ணவேண்டி வந்தது எங்கள் கர்மவினையின் குறையோ அன்றேல் சமயாபிமானமின்மையோ அறியேம்.

இவ்வாறான செய்கையை மாற்றச் சமயத்தினனர் பலர் இரங்கிச் செய்கின்றனர்.

ஆதலால் இந்துசாதனமே! உன் மூலம் எமது துயரை எடுத்துரைக்கத் துணிந்தேம். அன்போடு அவர்களுள்ளங்களில் பாய்ந்து எமது நிலையை அவர்கள் அறிவின்கண் உறுத்தி அறத்தை விளக்கி இலங்கையின் புத்திர சிகாமணிகளாய் விளங்கும் சைவாபிமானம் பூண்ட புண்ணிய பிரபுக்களை, எதிராய்வரும் தீபாவளித் தினத்தன்று நம் சமயாபிமானத்தைக் கொஞ்சமாயினுங் கொண்டாடி மகிழ்வடையுமாறு இங்குள்ள ரோயாளிகளாகிய சகோதர சகோதரிகளுக்கு வேண்டியவை புரியச் செய்தவைக்குமாறு நம்மையும் நம் சமயத்தையும் முறையே பன்முறை வாழ்க விளங்குக என்று வேண்டுகின்றேம்.

"என்று முகமலர்ந்தெம்பாதவர்கண்ணும்,சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்" என்றும்,

"கற்றறிந்தோர் கைமாறு தவாது மெய்வருந்தித், தம்மாலிய லுதவி தான் புரிவர்" என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

மாந்தீவு, 23—9—28.

இப்படிக்கு,
இந்து ரோயாளர்.

## சிலேச்சக்கர மனிதர்.

(21-ம் இலக்கப் பத்திரிகையினது தொடர்)

இனி, சிலேச்சக்கர வாணஞ் சுழன்று பல போலிக் காட்சிகளைக் காட்டும்போது அதைக் கண்டு மயங்கிய சிலர் "உலகத்தில் இதிற் சிறந்த காட்சி வேறொன்றுமில்லை" என ஏனையோர்க்கும் விரித்துரைத்து மகிழ்வர். ஆனால் காத்திராப்பிரகாரம் அச்சக்கரத்தினது பொறிகள் அன்னாரை ஊறுபடுத்தி விடுமாயின், சக்கரத்தைப் புகழ்ந்துநின்ற அவர் "இஃதென்ன அநியாயம், இவ்வாணத்தைச் சமிபித்தல்ஒருபோதுமாகாது எனப் பலருமறிய அதை வெறுத்து நீங்குவர்.

அதுபோலவே சிலேச்சக்கர மனிதரின்போலியான பல உதவியையும் பெற்று அவர்க்கே கட்டுப்பாடுபூண்டு நிற்கும் ஒருசாரார் தங்களை அடிமையாக்கவும் பெரும் புகழைப் பெறவும் எண்ணியே இவ்வித உதவிகளைச் செய்தார்கள் செய்கிறார்கள் என்னும் சூத்திரத்தையுணராது, "இவரன்றோ உலகிற் சிறந்த புண்ணிய புருஷர் இவருக்குப் பணங் காணி ஆபரணதிகளைக் கடவுள் கொடுப்பார்தானே; "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பதைக் கொண்டொழுகுந் தருமபக்தன்" என் றின்னோரன்ன மொழிகளைக் கூறிப் புகழ்வர்.

டெ சக்கர மனிதருந் தமது செயலையிட்டு ஊரிலே யாரும் வியந்து பேசுகின்றார்களா வென்று அறிய அவாவி நிற்பர். சிறிது காலத்தின்பின் சிலேச்சக்கர மனிதர் தாம் பிறர்க்குச் செய்த உதவிகளை நோக்கித் தம்வலைப்பட்டோரை அடிமைத்தனமாக்கும் கொள்கையை விரவிச் (சக்கரம்போலச்) சுட்டுவிடுவர். அவ்வாணத்தி லீடுபட்டு மகிழ்ந்துநின்றோர் அதனாற் சுடுபட்டு அதை இகழ்ந்து எவ்விதமாக முனிந்தனரோ அவ்விதமே டெ வாண மனிதரினது நயவஞ்சனைச்செயலை அறியாது அவரின் உபகாரத்தைப் பெற்றுப்போற்றிநின்றவரும் போற்றி நிற்கின்றவரும் இச்சக்கர மனிதரை வெறுப்பர்.

வேறு பலர் சக்கரத்தாற் சுடப்பெற்றும் அதைப் பொருட்படுத்தாது மேலுமதன் காட்சியையே கவர்ந்து நீங்காது நிற்பதுபோல இம்மனிதரின் இழிவு செயல்களையும் பொருட்படுத்தாது பின்னும் சக்கரமனிதரையே சரணடைவர்.

செய்கையிலே தப்பிதங்கொண்ட சில சக்கரமானது நெருப்பைக் கண்டவுடன் பற்றி அதி வேகமாகச் சுற்றி வெடித்துக் கட்டறுத்து நடித்துக் குழல்வேறு மத்தாப்புவேறு எலிவேறு சிலவேறாக ஆங்காங்கு வீழ்ந்து முன்னிருந்த உருவத்தினின்றுந் தாழ்ந்து இழிந்துவிடும். அங்ஙனமே சிலேச்சக்கர மனிதருந் தஞ் செயற்கை அறிவுத் தப்பிதத்தாலே தங்களது பணம், பணி, காணி முதலியவற்றை மற்றையோர் மதிக்க வேண்டுமென்ற மனோநிலையோடு அதிதீவிரமாக உலகிற் பற்பல போலிக் காட்சிகளிற் செலவிட்டு (தன்னுறுப்புக்களை இழந்த வாணம்போல) முன்னுருவழிந்து தஞ்செயலொழிந்து நிற்பர்.

இனி, அந்நியசமயக் குருமார் இச்சக்கரரூபர்தாங்கிப் போலிக் காட்சிகளால் மயக்கிப் பாமர சனங்களையும் ஏழைமக்களையும் வசப்படுத்திச் சமயபங்கஞ்செய்து தங்கள் சமயத்துட் குள்ளாக்கிவிடக் குறித்த சக்கரஞ்சுழன்று முடிவிற் பலன் யாதுங் காணாது சக்கரத்தை வெறுத்தவரை நிகர்த்து அந்நியமதத்திலுழன்று அதனால் பலன் யாதுமில்லையெனக் கண்டவர் பலர் தஞ் சுயசமயத்துள்ளாரென்பது யாவருமறிந்த உண்மையாகும்.

ஆதலாற் பெரியோர் பலர் இவ் வாணம் பலரைத் தம்வயப்படுத்தி சுற்றிலே நிமைதருவதுபோலச் சிலேச்சக்கர மனிதரும் பலரைத் தம் வசமாக்கி ஆட்டிப்படைக்கின்று தடுத்தலே தம் மேற் கடமையாயின் இந்தச் சக்கரமாக்களும் அவர்களில் ஈடுபடுவோரும் ஆறுதல் அடைவது திண்ணமே.

இங்ஙனம்,
பழையமாணவன்,
வதிரி தேவரையாளிச் சைவவித்தியாசாலை.

## மறைஞானசம்பந்த சிவாசாரியர் குருபூசை.

நிகழும் விபவ ஸ்ரீ ஆவணிமீ உகஉ (14-9-28) வெள்ளிக்கிழமை மாலை 7 மணி யளவிலே கண்டித் தமிழ் மண்டபத்திலே சாவகனல் வகுப்பில் உத்தியோகத்திலமர்ந்திருப்பவராகும் திருவாளர் க. வ. செல்லத்துரை யவர்களுடைய பொருளுதவிகொண்டு ஸ்ரீ ச.ம. செல்லையா அவர்களாலே ஷெ சந்தான குரவருடைய குருபூசை மிகவும் பயபக்தியுடன் நடத்தப்பட்டது. அத்தருணம் ஸ்ரீ சோம. சரவணபவன் அவர்கள் "குரு வழிபாடு" என்னும் விஷயமாகப் பேசமாறு தொடங்கி, குரு என்னுஞ் சொல்லினது பொருளை விளக்கிக் குருவினது வகையும் செயலும், குருவைத் தேடியடையு முறையும், அவர்களது பெருமையும், அவர்களுக்கு நாம் வழிபாடுசெய்யுமுறையும் இவ்வாறெமென விரித்துக் கூறும்பொழுது இடையே குருவின் வகைகளிலே சந்தான குருவைப்பற்றிப் பேசும்போது அன்று நடந்த குருபூசையினது தொடர்புபற்றி மறைஞானசம்பந்தசிவாசாரியருடைய வரலாற்றினையும் சுருக்கமாகக் கூறினர். 9 மணியளவிலே தேவாரபாராயணஞ் செய்யப்பட்டு யாவரும் விபூதிப் பிரசாத முதலியன பெற்று நிவேதனமருந்தியபின்னர்க் கூட்டம் கலைந்தது. க.டித.

---

## மலேயா சைவசித்தாந்த சங்கம் குவாலாலம்பூர்.

—:o:—

### மக்கள் முன்னேற்றம்.

யாழ்ப்பாணம் சைவப் பிரசாரகர் ஸ்ரீ த. குமாரசாமிப்பிள்ளை அவர்களால், செந்தூல் தம்புசாமிப்பிள்ளை பாடசாலையில் புதன்கிழமை (5-9-28) "மக்கள் முன்னேற்றம்" என்னும் விஷயமாக ஓர் அரிய உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அத்தருணம் டக்டர் ஆ. விசுவலிங்கம் அவர்கள் அக்கிராசனராகக் கூட்டத்தை நடாத்தினர்.

பிரசாரகரின் சொற்பொருளடக்கமாவது:—

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! உலகில் மக்களாய்ப் பிறந்தனராயினவரும், தற்காலத்தில் முன்னேற்றமடைதல்வேண்டும் என்ற ஊக்க முடையவர்களாய், பல சாதியத்தாரும் பலவகைகளிலும் முன்னேற்றமடைதற்கான முயற்சிகளைச் செய்துவருவதை யாம் கண்கு அறிந்திருக்கின்றோம். தமிழ் மக்களாகிய நாங்களும் முன்னேற்றமடையவேண்டிய வழிகளை விரைந்து தேடிக்கொள்ளவேண்டியது அவசியமல்லவா?

முன்னேற்றம் என்பது பலரும் கணிக்கும்படி வாழ்க்கையைஆக்கிக்கொள்ளுதலாம், வீரம், புகழ், ஞானம் முதலானவற்றை விருத்தி செய்தலாம். தமிழ் மக்களாகிய நாம் இவ்விஷயத்தில் எவ்வித நிலையிலிருக்கின்றோம், முன்னேற்றத்திற்கான என்ன முயற்சியைச் செய்திருக்கிறோம், செய்துகொண்டிருக்கிறோம், செய்யப்போகின்றோம் என்பதை உள்ளத்தில் உணருங்கள். கேவலம்! நாம்மாத்திரம் சொற்ப பொருளைத் தேடி எங்கள் குடும்பங்களைப் பார்த்துக்கொண்டிருப்போம் என்று நாம் ஒவ்வொருவரும் நினைத்துவிட்டால், எங்கள் நிலை என்னாகும். எல்லாரும் உத்தியோகம் பார்க்கமாத்திரம் படித்து, அதன்வருவாயைக் கவனித்தால் போதும் என்றிருப்பது பொருத்தமாகுமா? இது எப்போதும் ஒருவரை எதிர்பார்த்து, சேவித்து வாழும் முறையன்றோ. இதில், எங்கள் இயற்கை மரியாதைப்படி அன்னியர்கள் எங்களை மதிக்கின்றனரா. இல்லையே! ஆதலின் இந்த நிலையிலிருக்கும்பொழுதே நாம் எங்கள் சுயமரியாதை வழிகளை ஆராய்ந்து வளர்ப்பதற்கான முறைகளைத் தேடுதல் எமது கடமையல்லவா?

உலகமுறையில் கவனிக்கும்போது, பொருளாதார விருத்தி, நன்குமதிப்பு, சுகவாழ்வு என்னும் மூன்றும் எங்கள் முன்னேற்றத்துக்கு முக்கிய சாதனங்களாம். பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை யென்றபடி, இவ்வுலகில் எல்லா வழிகளிலும் பார்த்தாலும் பொருளாதாரம் இன்றியமையாததாயிருக்கின்றது. இதனை விருத்தி செய்வதற்கு உத்தியோக முதலியவற்றாலும், செல்வாக்குடனும், பல கூட்டத்தினருடைய அனுபவ பழக்க வழக்கங்களுடனும், விவேகத்துடனும், ஆராய்ச்சியுடனும், பொருளாடும் இந்நகரில் வசிக்கும் அன்பர்களே! நீங்கள் இந்நகரிலோ, அல்லது உங்கள் தாய்நாட்டிலோ என்ன முயற்சிகளைச் செய்திருக்கின்றீர்கள்? ஒருவர் யாதானுமொருவழியைப் பின்பற்றினால், பொருளீட்டும் முறையில் அதனையே எல்லாரும் பின்பற்றுவதன்றி, புதிதாக உங்கள் ஆராய்ச்சியில் எந்த வகையைக் கையாளுகின்றீர்கள்? வருங்காலங்களிலேனும் நீங்கள் ஒவ்வொருவரும் அவசியங் கவனிக்கவேண்டிய சில வழிகளை இங்கே குறிப்பிடுகின்றேன். உங்களில் பலர் மனமுக்கப்பட்டுச் சிறுதொகைப் பொருள்களாகச்சேர்த்தேனும் பெருந்தொகையாக்கி, அந்த முதலைக் கொண்டு என்றும் நடைப்படாததாய், கெடுதல் வராததாய், வருவாயை விருத்திசெய்யத்தகுந்ததாயுள்ள பெரிய ஒரு வியாபார முயற்சியை இந்நகரிலோ, அல்லது உங்கள் தாய்நாட்டிலோ ஒரு பொதுச் சபையோரால் நடைபெறுமாறு செய்தல் (1), மற்றநாட்டினர் தம் விளைபொருள்களை எப்படி எங்கும் பரவச்செய்கின்றனரோ அதுபோல் உங்கள் தாய்நாட்டு விளைபொருள்களைக் காலத்துக்கேற்பப் புதுமுறையாகப் பக்குவப்படுத்தி, பல நாட்டினர்க்கும் உபயோகிக்கும்படியான தேடுதல் (2), நம் தாய்நாட்டு வாசிகளுக்கு இயமுறைக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களை ஆராய்ந்து, அவைகளைத் துயாசப்பட்டாயினும் நம்நாட்டில் உண்டாக்கத்தக்க வழிகளைச் செய்தல் (3), பலருக்கும் நித்தியவாழ்க்கையில் உபயோகப்படத் தகுந்த கருவிப் பொருள்கள் சிலவற்றை நூதனமாகச் செய்யும் முறையைக் கண்டுபிடித்து, தொழிலாளர் மூலமாக அவற்றைச் செய்வித்துப் பல இடங்களிலும் விற்றுவரச் செய்தல் (4) ஆகிய இந்த முறைகளைக் கையாண்டு வந்தாலல்லவா, நம் கூட்டத்தினரும் நம் நாடும் பொருள் வருவாயினால் முன்னேற்றமடையலாம். ஏழைகளாயுள்ளவர்களும் தொழில் செய்தலின் பயனாக விருத்தியடைவார்கள். அன்பர்களே! பொருளாதாரவிருத்திக்காக இதுகாறுஞ்சொல்லிவந்த முறைகளை நீங்கள் எல்லோருங் கவனித்து அதற்குரிய முயற்சிகளைச் செய்தல்வேண்டும் என்று தங்களெல்லோரையும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

பொருளை நம்மவர்கள் செலவிடும் முறைகள் நியாயமான வழியிலா அல்லவா என்பதைச் சிறிது சிந்தியுங்கள். பொருள் மிகுந்த தனவந்தர் ஒரு மோட்டோரகம் வைத்திருக்கின்றார், புதிதாக ஒரு கல்வீடு கட்டினார், ஒருதொகைப் பொருளைச் செலவிட்டுச் சட்டசபையில் அங்கத்தவராயினர், நாலு வேலைக்காரர்களை வைத்திருக்கின்றார், போலி இடம்பாசாரிகளாகிய அன்னவர்களைக் கண்டு மயங்கி, தேநீர் விருந்து முதலியன வைத்தும் பொருள் கொடுத்தும் உபசரிக்கின்றார். இன்னோரன்னவற்றைப் பார்த்துப் பொருளில்லாதவரும் அவர்களைப்போல மோட்டோரதம் வைக்கவேண்டும், கல்வீடு கட்டவேண்டும், அங்கத்தவராகவேண்டும், வேலைக்காரரை வைக்கவேண்டும், உண்டுகேத்தவனைப் பார்த்தும் பொருள் செலவிட்டுபசரிக்கவேண்டும் என்றெண்ணினால், இவர்கள் கெதி என்னாகும். பொருளுடைய ஒரு பெண்மகள் விலையுயர்ந்த பட்டுப்பீதாம்பரங்களையும், இரத்தினாபரணங்களையும் அணிந்திருப்பதைக் கண்டவுடன், பொருளில்லாத பெண்மகளும் அங்ஙனமே அணிந்தேதிரவேண்டும் என்றெண்ணினால் இவர்கள் வாழ்க்கையும் அறிவுடைமையும் என்ன பயன் தரும். சரீரபெலத்துக்கும் சுகாதாரமுறைக்கும் பொருத்தமான உணவுப் பொருள்களை விரும்பவும் அவைகளை விரும்பாது அளவுக்கு மேற்பட்ட பொருத்தமில்லாத உணவுப் பொருள்களையும் பானவகைகளையும் அதிக பொருள் கொடுத்து வாங்கி உபயோகித்தல் முதலிய பலவழிகளினாலே, நீங்கள் வருந்திச் சம்பாதிக்கும் பொருளை மிதமிஞ்சிச்செலவிடுவதினால் உள்ள வருவாயையும் போக்கடித்து, வறுமையென்பது துணையாகச்சேர்ந்துகொள்ளுகிறது. இதற்காகவே "சிக்கனவாழ்வு" என்பதன்சாரத்தை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டுமென்று முன்னோர் முறையிடலாம்பினர். சிக்கனம் என்பது பொருளுடையார் தகுதிகண்டுஞ் செலவிடாமல் லோபித்தனங் காட்டுவதையன்று. தத்தமக்குள்ள வருவாயைக் கவனித்து அதற்கேற்பப் பொருளைச் செலவிட்டுத் தகுதிப்படி வாழுதல், அந்த முறையாவது, தமக்குள்ள வருவாயை நான்கு பாகமாகப் பிரித்து ஒருபாகத்தைத் தமது பிற்சீவியத்துக்கோ, பிற்சந்ததியார்க்கோ வைத்தல்; ஒருபாகத்தைத் தருமத்துக்கும் ஏழைகட்கும் ஈதல்; இருபாகத்தைக் கொண்டு அதற்குத் தக்கமுறையில் தமது ஜீவியத்தை நடாத்தல் என்பனவே. இவ்விடத்தில் நமது பெண்மக்களாயுள்ளார் திருக்குறள் முறையில் வாழ்க்கைத் துணைநலம், "மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்பதாகிய பாசுரங்களைப் படித்துணரவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறேன். இதுகாறுங் கூறியவற்றால் உள்ள வருவாயைக் கணித்து வீண்வழியிற் போக்காமலும் அதிக டம்பத்தை விரும்பாமலும் தத்தம் நிலைக்கேற்பச் செலவிட்டால் அவலப்படாமல் வாழலாம் என்பதை ஞாபகத்தில் வைக்கும்படி தெரிவிக்கின்றேன்.

நன்குமதிப்பென்பது மக்களாய்த்தோன்றிய ஒவ்வொருவரும் அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டியதொன்று. ஆனால், இது விலைகொடுத்தாயினும் உபாயத்தினாலேனும் பெற்றுக்கொள்வதன்று. அறிவுடைமையாலும், தகுதியான ஒழுக்கவழியில் நின்று தம்மைப் பேணிக்கொள்ளுதலாலும் வருவதாகும். பலதேசங்களினியல்புகளையும் பல சாதியத்தாரின் நிலைமைகளையும், பிறரால் பழிக்கப்படுஞ் செயல்களையும், பலராலும் மதிக்கப்படுஞ் செயல்களையும், தம் நிலைமைகளையும், தமது நாட்டின் நிலைமைகளையும், மற்றுமுள்ளனவற்றையுமெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, அவ்வவற்றின் உண்மைத்தன்மைகளை நிறுத்தெடுக்கத்தக்க பொது அறிவை வளர்த்துக்கொள்வது, இதற்குப் பிரதானமான முதற்படியாகும். பலவற்றையும் தன்னுடைய கிந்தனையும் அவற்றுடன் பொருத்திப் பார்க்கின்ற இந்தப் பொது அறிவு, பள்ளிக்கூடப் பாடம் படித்த அளவிலாவது, ஒரு பரீட்சையைக் குறித்துப் படித்துச் சித்தியடைந்த அளவிலாவது, ஒவ்வொரு தொழின் முறைக்கேற்ற கல்வியைப் படித்த அளவிலாவது வந்துவிடமாட்டாது. நீதிநூல்கள், பொதுநூல்கள், பக்திநூல்கள் முதலான அறிவுநூல்களை ஆராய்ந்து தெளிவுடன் தெளிந்தோர் சொல்வதைக் கேட்டல், பல சமூகத்தினரோடும் கலந்து பழகுதல், அவற்றை அனுபவத்துக்குக் கொண்டுவருதல் முதலிய பல துறைகளினால் வந்திசைவதாகும். தற்காலத்தின் இவற்றின் உண்மையறியாதார் சிலர் ஆங்கிலம் படித்திருந்தால், அவர்கள்தாம் படித்தவர்கள், அதுதான் படிப்பு; தனித்தமிழ்நூல்களைப் பல அதுபவங்களோடு ஒருவர் நன்றாய்ந்திருப்பினும் கொஞ்சம் ஆங்கிலமேனும் தெரியாவிட்டால் அவரைச் சிறிதுபாராமுகஞ் செய்கின்றனர். இவர்களை நன்குமதிப்பதும் சிலவிடத்து அரிதாயிருக்கின்றது காரணம், தம் நிலைமையை மறந்துவிடுதலினாற்றான் என்றுகூறலாம், (வரும்)

ஷெ சபைக் கௌரவ காரியதரிசி.

---

### இலக்கம் 11.

### அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

## மலேரியா வென்னும் காட்டுக்காய்ச்சலும் நுளம்பும்.

(முற்றொடர்.)

எல்லா நுளம்புகளும் தண்ணீரில் மாத்திரம் தான் முட்டைகளை இட்டுக் குஞ்சுகளைப் பொரிக்கும். அவைகள் புல்லிலும் பனியிலும் குஞ்சுகளைச் ஜெனிப்பிக்கமாட்டா. எல்லாச் சாதி நுளம்புகளின் ஜீவியகாலமும், காலபரிவிருத்தியும், அவைகளின் உற்பத்தியும், பெருகும் காலமும், அநேகப்பற்றாய் ஒரேவிதமாய்த்தானிருக்கும். ஆனபடியால் நாங்கள் ஒரு சாதி நுளம்பின் ஜீவியசரித்திரத்தை உற்றுநோக்கி அறிந்துகொண்டால் அது மற்றெல்லாச் சாதி நுளம்புகளுடைய ஜீவியசரித்திரங்களையு மறிந்ததற்குச் சமானமாகும். எல்லா நுளம்புகளும் முட்டையிலிருந்து தான் உற்பத்தியாகின்றன. "அனோவிலியா" வகுப்பைச் சேர்ந்த பெண் நுளம்பு நீரின் மேற்பரப்பில் அல்லது அதற்குக் கிட்டுமானத்தில் தான் தன் முட்டைகளை இடும். இம்முட்டைகள் இரேகா கணிதமுறையிலுள்ள வடிவங்கள் போன்று நீரில் மிதந்துகொண்டிருக்கும் "குலெக்ஸ்" (Culex) வகுப்பைச் சேர்ந்த நுளம்புகள் ஓடம்போன்ற சாயலுள்ள முட்டைகளை இடும். அம்முட்டைகள் ஒன்றோடு ஒன்று முட்டிக்கொண்டிருக்கும். கொஞ்ச நாட்களுக்குப் பின் காலத்திற்குத் தக்கமாதிரி இம்முட்டைகள் மயிர்க்குட்டிக் குஞ்சுகள் போன்ற சிறிய கிருமிகளாய் விடும். "அனோவிலியா" நுளம்புகள் இட்ட முட்டைகளிலிருந்து பிறந்த கிருமிகளாயிருந்தால் அவைகள் நீர்ப்பரவையின் மேல் சமநார நிலையில் கிடக்கும். சாதாரணமாய் வெளிபுழு என்று சொல்லப்படும் இக்கிருமி மிகச் சத்துவமுள்ளதும் கண்ணுக்கு இலேசாய்த் தோன்றக்கூடியதுமான ஓர்செந்து. அது நீரிலம்பிடக்கூடிய உணவுகளைப் புசித்துத் தன்னுடைய வாலின் நுனியிலிருக்கும் இரு சிறு துவாரங்கள் மூலமாய்ப் போதியளவு காற்றைச் சுவாசித்துக் கொள்ளும். "குலெக்ஸ்" வகுப்பைச்சேர்ந்த நுளம்பின் கிருமியானது நீர்மட்டத்திலிருந்து நிறதிட்டமாய்த் தலைகீழாய்த் தூங்கிக்கொண்டிருக்கும். அது, தான் சுவாசிக்கிறதற்குப் போதியளவு காற்று ஒருகட்டைக் குழாய் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறது. இந்தக் குழாயின் நுனி நீர்மட்டத்திற்குமேல் வெளியே தள்ளிக்கொண்டிருக்கும். இக்கிருமிகள் இவ்வாறு தண்ணீரிலிருந்து 6நாட்தொடக்கம் 3 கிழமைக்குள் அல்லது இன்னும் அதற்குக் கொஞ்சம் கூடின காலத்துக்குள் பெரிதாய் வளர்ந்துவிடும்.

இக்கிருமி பின் கூட்டுப்புழுவாய் வந்துவிடும். முன்னிருந்த நிலைமையிலிருந்து அது ரூபம் மாறியிருக்கிறதென்று நல்லாய்த் தெரியும். இப்பருவத்தில் அது சுருண்டவாலும் பெரிய தலையுமுள்ள ஒரு வளைவான செந்தாய்த் தோற்றும். அக்காலத்தில் அது தன் தலையின் நுனியிலிருக்கும் இரு சிறிய கொம்புகள் மூலமாய்த்தான் சுவாசித்துக் கொள்ளும். கூட்டுப்புழுவா யிருக்கும்பொழுது அது ஒரு ஆகாராதியையும் தேடுகிறதில்லை. 24 மணித்தியாலம் தொடக்கம் 72 மணித்தியாலங்களுக்குள் இந்தக் கூட்டுப்புழுவிலுள்ள மேல் தோல் வெடிக்கும். அப்பொழுது தான் நாம் எல்லோரும் நல்லாயறிந்த பிராயமான நுளம்பு அதிலிருந்து வெளிகிளம்பும்.

"அனோவிலியா" வகுப்பைச்சேர்ந்த நுளம்புகள் சுத்தமான தெளிந்த நீரில்தான் தங்கள் முட்டைகளை இடவிரும்பும். இந்த நுளம்புச் சாதியில் பெரும்பாகமாயுள்ளவை நீரில் மிகவும் அமைதியாய் நகர்ந்து கொண்டிருக்க அல்லது நின்றுகொண்டிருக்கத்தான் விரும்பும். ஆனால் வேறு வகுப்பைச் சேர்ந்த நுளம்புகள் கெதியாய்ப் பாயுந் தண்ணீரைத் தான் விரும்பும். அவைகள் சாதாரணமாய்த் தென்னங் கோம்பைகளிலும், சிரட்டைகளிலும், பழைய தகரங்களிலும் உடைந்த போத்தல்களிலும் முட்டைகளை இட்டுக் குஞ்சு பொரிக்கமாட்டா. "குலெக்ஸ்" வகுப்பைச் சேர்ந்த நுளம்புகள் சுத்தமான தெளிந்த நீரிற் தங்கள் முட்டைகளை இடும். ஆனால் அவைகளுக்கு ஓடாமற் தங்கிநிற்கும் அழுக்கைத் தண்ணீரிலும் தங்கள் முட்டைகளை இட மனச்சாய்வு உண்டுபடும். அவைகள் செயற்கையாயுள்ள பழைய தகரப் பெட்டிகளிலும், தென்னங் கோம்பைகளிலும், உடைந்த போத்தல்கள் முதலிய ஆதானங்களிலும் குஞ்சுபொரிக்கும்.

"அனோவிலியா" நுளம்புகள் பொதுவாய் மைமலான நேரங்களில் தான் இரைதேடித் திரிந்து சூரிய அஸ்தமனத்திற்குப் பின்புதான் ஒருவரைக் கடிக்கும். சிலவேளைகளில் அவைகள் சூரிய வெளிச்ச மிருக்கும்பொழுதும் கடிக்கும். "குலெக்ஸ்" வகுப்பைசேர்ந்த நுளம்புகள் எல்லா நேரங்களிலும் ஒருவரைக் கடிக்கும். சுறுக்காலைச் சுற்றியுள்ள இடங்களிலும், விரற்சுறுக்களிலும், சனத்திலும், காதுக்குப் பிற்புறத்திலும் தான் நுளம்புகள் அநேகப்பற்றாய்க் கடிக்கும். "அனோவிலியா" நுளம்பு ஒருவரைக் கடிக்க உட்காரும்பொழுது அது தலைகீழ் நேர்நின்றுகொண்டு [illegible] போல் தோற்றும். "குலெக்ஸ்" நுளம்புகள் ஒருவரில் உட்காரும்பொழுது அவைகளின் வயிறு அயலில் முட்டும்படியாயும் சமநாரத்திலும் இருக்கிறதாகத் தோற்றும். "அனோவிலியா" வகுப்பைச் சேர்ந்த நுளம்புகளில் சிலவற்றைத் தவிர, அவைகள் முதிர்ச்சியடைந்தபின் புள்ளி விழுந்த செட்டைகள் முளைத்திருக்கும். "குலெக்ஸ்" வகுப்பைச் சேர்ந்த நுளம்புகளில் சிலவற்றைத் தவிர மற்றவைகளுக்குத் துலக்கமான செட்டைகள் முளைத்திருக்கும். "அனோவிலியா" வகுப்பையும் "குலெக்ஸ்" வகுப்பையும் சேர்ந்த பெண் நுளம்புகள் மாத்திரம்தான் இரத்தத்தைக் குடிக்கும் என்றும், மற்றும் ஆண் நுளம்புகள் பழங்கள், புல் பூண்டு இவைகளின் சாரங்களை மாத்திரம் தான் குடித்து ஜீவிக்கும் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

---


### உபாத்தியாயர்கள் தேவை.

தலைமை ஆசிரியர்களாக நால்வரும், உதவி உபாத்தியாயர்களாகப் பலரும் தேவை தராதரப்பத்திர முள்ளவர்களாயிருத்தல் வேண்டும். பயிற்றப்பட்டவர்களாயின் நன்று.

மனேசர்,
சைவவித்தியாவிருத்திச்சங்கம்,
(Mis. 1299.) யாழ்ப்பாணம்.


---

### அளவெட்டி தப்பையப்புலமடதருமம்.

ஷெ மடதரும விஷயமாகப் பொருளுபகரித்தவர்களின் பெயர்களும் தொகைகளும் "இந்துசாதனம்" 39-ம் புத்தகம் 80-ம் இலக்கப் பத்திரிகையில் வெளியிடப்பட்டன. அதன் பின்னர் பொருளுதவியவர்கள்

1. குமாரவேலு பொன்னையா (10 வெள்ளி) ரூபா. 15-00
2. இளையதம்பி சரவணமுத்து (10 வெள்ளி) ரூபா. 15-00.

அளவெட்டி,
24—9—28. சி. சின்னப்பு.

(Mis. 1300.)

---

### யாழ்ப்பாணம் கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனிவின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நளன் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடும் பெரும்பேறுபெற்றதும யாழ்ப்பாணத்தில் மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணமூர்த்திகளுத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடந்து வருகின்றது ஷெ கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளாலும் பன்னீர்மரமும் நிற்கின்றமலைச்சாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து அவைகளிலே ஷெ மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினால் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
(Q. 113) கல்வெட்டித்துறை.

---


### விசேஷ இனம்.

உயர்ந்த மிலிடேரி காக்கிட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையுமுள்ளது ஒன்று ரூபா 2—8. மூன்று வாங்கினால் 1 பட்டு மப்ளர் இனும். 6 வாங்கினால் ஒரு கம்பளிப் போர்வை இனாம். இங்கிலிஷ் ட்வில் வெள்ளை ஷேர்ட் ரூ. 2-4. உயர்தர துணி, கைதேர்ந்தவேலை. உத்தரவாதமான தையலும் பொத்தான்களும். சாதாரண கடை ஷேர்ட் அல்ல.

சுவிற்சர்லாந்தில் மிகத்திறமையாய்ச் செய்யப்பட்ட அழகான 10வருட உத்தரவாதமுள்ள ரோல்ட்கோல்ட் தங்க ரிஸ்லெட் கடிகாரம். விலை ரு 10. தபாற்கூலி வேறு. இதை வாங்குபவர்களுக்கு பட்டு, தொட்டிகாசிம் பூச்சேலை இனும்.



உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O.,
Madras.

(Q. 112)


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.